**பருத்தித்துறை பிரதேச சபை**

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 25 மார்ச் 2019 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 30 யூன் 2019 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஒக்ரோபர் 2019 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஒக்ரோபர் 2019 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து பருத்தித்துறை பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**கணக்கீட்டு கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

**1.4 இணக்கமின்மைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் | | | |
| | உப பிரிவு 16 (2) | வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள்<br>- அத்தியாயம் X இன்பிரிவு 193 | மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள்<br>- இலக்கம் 571 | ஒப்பந்தகாரருக்கு மீளளிக்கப்பட வேண்டிய பிடிபணம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிடிபணம் தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,684,918 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 24,798,273தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் * | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் * | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 56,000 | - | 1,701,418 | 967,734 | 60,000 | - | 40,448 | 958,126 |
| வாடகைகள் | 6,273,000 | - | 6,881,230 | 126,308 | 5,510,000 | - | 5,748,138 | 121,709 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 6,582,000 | - | 4,949,503 | - | 6,290,000 | - | 6,526,972 | - |
| ஏனைய வருமானம் | 68,112,000 | - | 45,358,960 | - | 59,725,000 | - | 37,052,070 | - |
| | **81,023,000** | **-** | **58,891,111** | **1,094,043** | **71,585,000** | **-** | **49,367,626** | **1,079,835** |

*** பட்டியலிடப்பட்ட வருமானம் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.**

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 49,367,626 ஆக இருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 58,891,111 ஆக அதிகரித்துள்ளமையால் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டில் வருமான சேகரிப்பின் செயலாற்றல் ரூபா 9,523,485 இனால் | பட்டியல்படுத்தப்பட்ட வருமானத்தினை உறுதிப்படுத்த வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

அதிகரிக்கப்பட்டிருந்தது. எனினும் வருமானத்தினை பட்டியலிட தவறவிடப்பட்டிருந்து.

### 2.2.3 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் வீதவரி நிலுவை ரூபா 3,244,074 பெறுமதியானது கடந்த 01 தொடக்கம் 04 வருடங்களிற்கு மேலாக அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வீதவரி நிலுவை அறவிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 2.2.4 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| குத்தகை நிலுவை ரூபா 118,439 தொடர்பில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குத்தகை நிலுவை தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | விபரங்கள் உள்ளவற்றுக்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |

### 2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு தொலைத்தொடர்பு கோபுரங்களின் உரிம கட்டணங்கள் ரூபா 50,000 இனை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அனுமதிக்கட்டணங்களினைஅறவிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்டுகின்றது. |

**2.2.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,112,162 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 6,844,143 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதி கிடைக்கப்பெறும் போது நிலுவைகள் பெறப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், 30 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 வரையிலும் 06 விடயங்களுக்கு மாத்திரம் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | உபவிதிகள் குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களும் நடைமுறைப்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| விதிக்கப்பட்ட உப விதிகளின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 06 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகளுக்கிணங்க வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. |

**(இ) நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், சபையினால் செயற்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 20 செயற்பாடுகளில் 06 செயற்பாடுகளுக்கு மாத்திரம் வருடாந்த பாதீட்டினூடாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையினால் ரூபா 9,700,000 பெறுமதியான 14 செயற்பாடுகள் செயற்படுத்த முடியாதிருந்தது. | அபிவிருத்தி ஒதுக்கத்தின் மூலம் செயல் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். | 14 வேலைகளும் அபிவிருத்தி ஒதுக்கத்தின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளது. |

**(ஈ) பணிகளை நிறைவேற்றலின் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 09 செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட் போதிலும் அச்செயற்பாடுகளி செயலாற்றலில் தாமதங்க அவதானிக்கப்பட்டன. | குறிப்பிட்ட செயற்பாடுகளை முடிவுறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | குறிப்பிட்ட வேலைகளுக்கு ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய காரணங்களுக்காக கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. |

**(உ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டு திண்மக்கழிவகற்றல் செலவினமாக ரூபா 121,945 செலவு செய்யப்பட்ட போதிலும் திண்மக்கழிவகற்றல் நடவடிக்கைகள் பிரதேச சபையினால் வினைத்திறனாக மேற்கொள்ளப்படவில்லை. | திண்மக்கழிவினை மீள் சுழற்சி செய்வதனூடாக வருமானம் உழைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ஆ) | திண்மக்கழிவு பணிகளில் ஈடுபடுத்தப்படும் சுகாதாரத் தொழிலாளர்களுக்கு காலத்திற்கு காலம் மேற்கொள்ள வேண்டிய மருத்துவ பரிசோதனைகள் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுகாதாரத் தொழிலாளர்களுக்கு வருடாந்தம் மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | மருத்துவப்பரிசோதனை இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. |
| (இ) | சபையானது திண்மக்கழிவு சேகரித்தலின் போது தரம் பிரிக்கப்படாது உக்கக்கூடிய குப்பைகள், உக்க முடியாத பொருட்கள் என தரம் பிரிக்கப்படாது சேகரிக்கப்படுகின்றன. | திண்மக்கழிவினை தரம் பிரித்து சேகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | தரம் பிரித்து சேகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. |

**(ஊ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திண்மக்கழிவுகள் அகற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த பிரதேசத்தில் கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரியநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபைகளினால் கட்டட அனுமதிக்கான விண்ணப்பங்கள் தொடர்பாக உரிய காலத்தில் பரிசீலனைகள் மேற்கொள்ளப்படாததுடன் கட்டட அனுமதிக்கான பதிவேடு முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. | உரிய காலத்தில் கட்ட அனுமதிகள் வழங்கப்படுதல் வேண்டும். | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் |
| (ஆ) | மக்கள் சேவைப்பட்டயம் பொது மக்கள் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மக்கள் சேவைப்பட்டயம் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் |
| (இ) | பிரதேச சபைக்கு பொதுமக்களினாலும், பொது நிறுவனங்களினாலும் கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடு தொடர்பாக உரிய காலத்தில் தீர்வுகள் வழங்கப்படவில்லை. | முறைப்பாடுகள் தொடர்பாக உரிய முறையில் விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் |
| (ஈ) | 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்டிருந்த சனசமுக நிலைய மானியங்களில் ரூபா 306,400 தொடர்பில் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சனசமூக நிலைய மானியங்கள் முழுமையாக வழங்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | மானியங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (உ) | வியாபார அனுமதிப்பத்திரகட்டண அறவீட்டாளர் விபரம் ஏடுகளில் பதிவு செய்யப்படாது அறவிடும் போது மட்டுமே வருமானமாக கணக்கிடப்படுவதினால் வருமதியான அனுமதிப்பத்திரக் கட்டணங்களின் தொகை கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | வியாபார அனுமதி பெறுவோர் தொடர்பான பதிவேடு பேணப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | உள்ளூராட்சி உதவியாளரினால் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாமையினால் பிரதேச சபைக்குரிய முக்கிய பணிகள் நிறைவேற்றப்படாமல் இருந்தது. | உள்ளூராட்சி உதவியாளரினால் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் உரிய காலத்தில் சமர்பிக்கப்பட வேண்டும். | பதில் தரப்படவில்லை. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 09 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட தொகைக்கு சமனான பதவியினர் நியமிக்கப்பட வேண்டும். | பதவி வெற்றிடங்கள் இல்லாமல் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டடங்கள் என்பவற்றின் சோலைவரி அறவிடுவதற்காக வருடாந்தம் சபையினால் ஆதன உரிமையாளர்களுக்கு “K” படிவம் வழங்கப்பட வேண்டும். எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் பிரதேச சபையினால் ஆதனங்களிற்கான “K” படிவம் பொதுமக்களிற்கு விநியோகிக்கப்படுவதில்லை. | உரிய சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிலுவைகள் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. |
| (ஆ) | பிரதேச சபையினால் அனுமதியற்ற கட்டடம் அமைத்தமை தொடர்பாக வதனரூபன் மனோரஞ்சிதம் என்பவருக்கு எதிராக 30283 ஆம் இலக்க வழக்கு 2016 ஆண்டிலிருந்து தொடரப்பட்டிருந்த போதும் இதற்கான செலவுகள் | வழக்கிற்கான செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | பிரதேச சபையினால் 2011 ஆண்டு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த இன்பருட்டி கடற்கரையோர மீன்சந்தை குத்தகை ரூபா 10,332 குத்தகைதாரரிடமிருந்து 08 வருடங்களாக அறவிடப்பட்டிருக்காததுடன் இது தொடர்பாக 33109 ஆம் இலக்க வழக்கு 2018 ஆண்டிலிருந்து நடைபெறுகின்ற போதும் இதற்கான செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வழக்கிற்கான செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஈ) | பிரதேச சபையினால் 2014 ஆண்டு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த மந்திகை சந்தைக் கோழி இறைச்சிக் குத்தகை ரூபா 34,003 குத்தகைதாரரிடமிருந்து 05 வருடங்களாக அறவிடப்பட்டிருக்காததுடன் இது தொடர்பாக 33108 ஆம் இலக்க வழக்கு 2018 ஆண்டிலிருந்து நடைபெறுகின்ற போதும் இதற்கான செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வழக்கிற்கான செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 12 வாகனங்களைத் திருத்தம் செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திருத்தம் செய்யக்கூடிய வாகனங்களினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 3.5.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபையின் பயன்பாட்டிலுள்ள 09 வாகனங்கள் பிரதேச சபையின் பெயருக்கு உரிமை மாற்றப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான வாகனங்கள் அனைத்தும் உரிமை மாற்றம் செய்யப்பட வேண்டும். | ஐ உரிமை மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 3.5.3 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சுற்றுலாத்துறைக்காக மணற்காடு கடற்கரையோரமாக 2016 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ரூபா 2,805,443 பெறுமதியான மலசலகூடம், உடைமாற்றல் அறை, தண்ணீர் தாங்கி, கழிவகற்றல் தொட்டி, கரையோர இருக்கை, விற்பனைக்கூடம் என்பன நாளதுவரை பயன்படுத்தப்படாதிருப்பதுடன், பராமரிக்கப்படாமலும் காணப்படுகின்றது. | சுற்றுலாத்துறையினை மேம்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட கட்டடங்களினை பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளினை மேற்கொள்ளுவதுடன் உரிய முறையில் பாரமரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 3.5.4 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| தலைமை அலுவலகத்தினது வருடாந்த களஞ்சியக் கணக்கெடுப்பின் போது 86 பொருட்களுக்கான உண்மையான இருப்பு பெறுமதி காட்டப்படாது கணக்கெடுப்பு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | உரிய முறையில் கணக்கெடுப்பு அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கணக்கெடுப்பு அறிக்கை உரிய முறையில் தயாரிக்கப்படும். |

### 3.6 பெறுகை

#### 3.6.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சேவைகளுக்காக சபையினால் பெறுகை வழிகாட்டி 4.2 இல் குறிப்பிட்டதற்கு அமைவாக ஒவ்வொரு வருடத்திற்குமான பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டமானது தயாரிக்கப்பட்டதற்கான அடிப்படை ஆவணம், முன்மொழிவுகள், உள்ளூராட்சி மன்றங்களின் 4 வருட அபிவிருத்தி திட்டங்களின் முன்மொழிவுகளிலுள்ள சேவைகள் என்பன பின்பற்றப்படாது தயாரிக்கப்பட்டிருந்தது. | பெறுகைள் திட்டமானது அனுமதிக்கப்பட்ட மாதிரிக்கமைவாக தயாரிக்கப்பட வேண்டும். | மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித்திட்டம், பொதுமக்களின் கோரிக்கைள் என்பவற்றை கருத்திற்கொண்டு வேலைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. |

#### 3.6.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டி 2.11.2 இல் பிரகாரம் பெறுகைக்குழுக்களினதும், தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுக்களினதும் கூட்டங்களிற்கான வருகை இடாப்பு பேணப்பட்டிருக்கவில்லை. | கூட்டங்களிற்கான வருகை இடாப்புகள் பேணப்பட வேண்டும். | எதிர்வரும் காலத்தில் உரிய பதிவேடு பேணப்படும். |
| (ஆ) | பெறுகை வழிகாட்டி நெறி 2006 இன் இல 5.4.11 இன் படி ஒப்பந்த வேலை தொடர்பாக மேற்கொள்ளப்படும் பெறுமதி சேர் வரி தொடர்பான விபரங்களின் பிரதி தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி சேர் வரி தொடர்பான அறிக்கையின் பிரதி தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். | உரிய நடவடிக்கை எடுக்கப்படும் |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் பாதீட்டின் மீண்டுவரும் செலவுகளான பயணச்செலவு, வழங்கு பொருள் தேவை பொருள், மூலதனச்செலவுகளை பழுதுபார்த்தல், மானியமும் உதவுதொகைகளும், ஓய்வூதியங்கள் என்பவை உண்மையான செலவிலிருந்து கூடுதலான வீதமானது சேமிப்பாகக் காணப்பட்டிருந்தது. இதனால் ஒரு வினைத்திறனற்ற பாதீடாக காணப்பட்டது. | பாதீட்டினை சரியான முறையில் திட்டமிடுவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | பதில் தரப்படவில்லை. |